செ.வெ.எண்:23 நாள்:07.04.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

# சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்குப்பதிற்கு பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், அரசு தொழில்நுட்ப கல்லூரியில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காப்பு அறைகளில் வைத்து பூட்டி முத்திரையிடப்பட்டது.

*****************

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-வாக்குப்பதிவு நேற்று (06.04.2021) நடைபெற்றது. இத்தேர்தலில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 111-மேட்டுப்பாளையம், 116-சூலூர், 117-கவுண்டம்பாளையம், 118-கோவை (வடக்கு), 119-தொண்டாமுத்தூர், 120-கோவை (தெற்கு), 121-சிங்காநல்லூர், 122-கிணத்துக்கடவு, 123-பொள்ளாச்சி, 124-வால்பாறை ஆகிய 10 சட்டமன்ற தொகுதிகளுக்கு **4427** வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதனையடுத்து தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையமான அரசு தொழில்நுட்ப கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள காப்பு அறைகளில் (strong Room) வைக்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், அரசு தொழில்நுட்ப கல்லூரியில் இன்று(07.04.2021) அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கான காப்பு அறைகளில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்ட பின்னர் வாக்குப்பதிவு ஆவணங்கள் ஆய்வு (**SCRUTINI)** செய்யப்பட்டு அந்தந்த சட்டமன்ற தொகுதி பொதுப்பார்வையாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள்,

மற்றும் அனைத்து கட்சி பிரமுகர்கள் ஆகியோர் முன்னிலையில் பூட்டி முத்திரையிடப்பட்டது.

நேற்று நடைபெற்ற இப்பொதுத்தேர்தலில் **கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகளில் 30,82,028 வாக்காளர்களில் 21,05,673 வாக்காளர்கள் வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையாற்றினர். இது கோயம்புத்தூர் மாவட்டத்தின் மொத்த வாக்காளர்களில் 68.32% ஆகும்.**

இவ்வாக்குப்பதிவு இயந்திரங்கள் கோவை அரசு தொழில்நுட்ப கல்லூரில் **அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கென தனித்தனியே அமைக்கப்பட்டுள்ள காப்பு அறைகளில் (Strong Room) வாக்குப்பதிவு இயந்திரங்கள்** (Control Unit and Ballot Unit), **மற்றும் வாக்குப்பதிவு சரிபார்ப்பு** (VVPAT) **இயந்திரங்கள் வரிசைப்படி முறையே வைக்கப்பட்டது.**

மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் (02.05.2021) வரையில் பாதுகாப்பு அறைகளில் வைத்து பாதுகாக்கப்பட உள்ளதால் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மத்திய தொழில் பாதுகாப்புப்படை வீரர்கள், ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு காவலர்கள் ஆகியோரைக் கொண்டு மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையத்தில் **உட்புறம் மற்றும் வெளிப்புறம் 150 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன.** வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறைகள் **உள்ள பகுதிகளில் 70 கண்காணிப்பு கேமராக்களும்,** மையத்தின் வளாகம், நடைபாதை உள்ளிட்ட பகுதிகளில் **80 கண்காணிப்பு கேமராக்களும், பொருத்தப்பட்டு**

**கேமராக்களில் பதிவாகும் காட்சிகளை** 24 மணி நேரமும் கண்காணிப்பதற்கு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பு அறைகளை வேட்பாளர்களின் முகவர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அறையிலிருந்தே, கண்காணிப்பு கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் பார்த்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**